# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 12,215 — 1960 ඔක්තෝබර් 21 වැනි සිකුරාදා — 21.10.1960**

12,215 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 245 |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 245 |
| ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| ஏல விற்பனைகள் .. .. .. | — |
| நாணுவிதம் .. .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசனத் திணைக்களம்

அநுராதபுரம், வன்னியன்குளம் என்னுமிடத்தில் கனிஸ்ட எழுது வினைஞர்களுக்கு 5 நிரந்தர வீடுகள் (இலக்கம், 12, 20, 21, 36, 37), உபகோட்ட தலைமைக் காரியாலயம் வன்னியன் குளம் அநுராதபுரத் திட்டத்தின் கீழ், கட்டுவதற்கு வடமத்தியகோட்ட நீர்ப்பாசன எந்திரி, அநுராதபுரம் 1960 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16 ம் திகதி காலை 10·00 மணிவரை தனித்தனி கேள்விப்பத்திரங்சள் ஏற்றுக் கொள்வார்.

நீர்பாசனத் திணைக் களத்தில் ரூபா 20,000 க்கு குறையாமல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

மிகிந்தலை, மகா கணந்தராவ உபகோட்ட நீர்ப்பாசன எந்திரியிட மிருந்து பெற்ற கேள்விப்பத்திர படிவங்களில் ஒவ்வொரு கட்டிடத்துக்கும் தனித்தனி கேள்விப்பத்திரம் இரண்டு படியில் சமர்ப்பிக்க வேண்டும். அவரிடமிருந்து சகலவிதமான தகவல்களும் விண்ணப்பப் படிவங்களும் 1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24 ம் திகதி முதல் கார்த்திகை மாதம் 14 ம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவம் பெறவிரும்பும் ஒப்பந்தக்காரர்கள் நீர்ப்பாசன எந்திரி, மகாகணந்தராவ உபகோட்டக்காரியாலயத்தில் அல்லது கச்சேரியில் ஒவ்வொரு கட்டிடத்துக்கும் ரூபா 25 முற்பணம் கட்டி பற்றுச்சீட்டு சமர்பிக்க வேண்டும். தற்சமயம் வேலை ஒப்புக்கொண்டிருக்கும் ஒப்பந்த காரர்கள் தாங்கள் வேலை ஒப்புக்கொண்டிருக்கும் பணியாளரிடமிருந்து தங்கள் திருப்திபற்றிய சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி நாள் அன்று திறக்கப் படும். அச்சமயம் ஒப்பந்தக்காரர்கள் சமூகம்தர அனுமதிக்கப்படுவார்கள்.

டி. வி. ஏ. சேனரத்தின
நீர்ப்பாசன எந்திரி
மகா கணந்தாரவ உ. கோ.

மிகிந்தலை,
1960 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 13 ந். உ.

10–531

---

### தபாற் தந்திப் பகுதி

#### குழிவெட்டுவதற்கும் அதைத் திரும்ப நிரப்புவதற்குமான கேள்விப் பத்திரங்கள்

கீழ்காணும் இடங்களில் குழிகளை வெட்டுவதற்கும், இப்பகுதிப் பதவியின ரால் குழாய்கள் வைக்கப்பட்ட பின்னர், அக்குழிகளைத் திரும்ப நிரப்பு வதற்குமான கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16 ந் திகதி வரை கொழும்பு மத்திய தந்திக் கந்தோர் தந்தி தெலி போன் பிரதான இஞ்சினியரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) றீஜன்ட் வீதி—இன்வலி ரேட் சந்தியிலிருந்து இன்வலி ரேட் வழியாக அண்ணளவான 900 யார் தூரத்தில் வாட்பிளேஸ்—இன்வலி ரேட்டு சந்தி வரையும்.

(2) வாட்பிளேஸ்—இன்வலிரேட் சந்தியிலிருந்து இன்வலிரேட், காசல் வீதி வழியாக அண்ணளவான 1,300 யார் தூரத்தில் மொடல் பண்ணைவீதி—காசல் வீதிச் சந்திவரையும்.

(3) மொடல் பண்ணை வீதியாகவும், கோல்வ்லிங்ஸ் வழியாகவும் அண்ணளவான 500 யார் தூரத்தில்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கொழும்பு மத்திய தந்திக் கந்தோர், தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரிடமிருந்து பெற்ற பத்திரங்களில் (இரட்டைப் பிரதிகளில்) அனுப்பப்படல் வேண்டும். கொழும்பு, மத்திய தந்திக் கந்தோர் தந்திக் காசாளரிடம் அல்லது கொழும்புக்கு வெளியிட மாயின் அத் தபாற் கந்தோர் தலைவரிடம், கேள்விப்பத்திரப் பொறுப்புப் பணமாக ரூபா 100 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15 ந் திகதி பி. ப. 4 மணிவரை வழங்கப்படும்.

ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்ற இரண்டு ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக இரண்டு உத்தரவாதிகளைத் தமது செலவிலேயே தருவ தற்கு தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பதாரர் தேவை யானபோது வேண்டப்படுவர்

ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்றுவதற்காக தெரிவு செய்யப் பட்ட விண்ணப்பதாரர், கேள்விப்பத்திர மதிப்பின் 5 வீதத் தொகையை தபாற் தந்தித் தலைமை அதிபதியிடம் காசாக பிணைப்பணம் கட்ட வேண்டப்படுவதுடன், ஒப்பந்தத்திற்சேரும்போது, உடன்படிக்கையில் முத்திரைச் சட்டபடி முத்திரைகளை ஒட்டவும் கடமைப்பட்டவராவர்

கேள்விப்பத்திர முடிவுத் திகதியிலிருந்து குறைந்தது பதினைந்து (15) நாட்கள் வரை கேள்விப்பத்திரங்கள் ஒப்புக் கொள்வதற்குத் தகுதியான வையாக இருக்க வேண்டும்

1960 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16 ந் திகதி மு ப 10 மணிக்கு தந்தி தெலிபோன் பிரதான இஞ்சினியரின் காரியாலயத்தில் கேள்விப் பத்திரம் திறக்கப்படும் பொழுது கேள்விப்பத்திர கையொப்பதாரர்கள் சமூகமளிக்க வேண்டும்

எச். ஈ. செனிவிரத்தின,
தபாற் கந்தோர்த் தலைமை அதிபதி.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு 1
1960 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 12 ந உ

10–556

---

## பொருட்கள் விற்பனையும், பிறவும்

### இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி விளம்பரம்

கண்டெடுக்கப்பட்டனவும், உரிமை கோராது விடப்பட்டனவுமாகிய பொருட் கள், கொழும்பு இறந்த சொத்துச் சேமக் காரியாலயத்தில் (போக்கு வரத்து மேற்பார்வையாளர் அலுவலக அடித்தளத்தில்) 1960 ம் ஆண்டு நவம்பர் 1 ம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1. மணி முதல் ஏலத்தில் விற்கப்படும். ஏலம் நிகழுமிடத்தில் விற்பனை நாள் காலை 10.30 மணி முதல் பொருள்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

த. பெ. 355,
கொழும்பு, 30.9.1960.

பி. டி. றம்பால,
பெருந் தலைவர்.

10—377


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது